**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

முன்னிலை: திரு.N.பாரதிராஜன் பி.ஏ., பி.எல்.,

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 26 ஆம் நாள்திங்கட்கிழமை

**<u>அ.வ.எண்.348/2019</u>**

1) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கதவிலக்கம் 3/39, கண்டியப்ப கவுண்டர் வீதி, சுப்பேகவுண்டன்புதூர் (அஞ்சல்) என்ற முகவரியில் வசித்து வரும் இந்து, வயது சுமார் 58 த/பெ.(லேட்) பழனிச்சாமி, என்பவரின் மகளுமான க/பெ. திரு.வேல்சாமி, என்பவரின் மனைவியுமான

திருமதி. V. லட்சுமி,

2) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கதவிலக்கம் 4/192 திவான்சாபுதூர் கிராமம், அம்பராம்பாளையம் (அஞ்சல்) என்ற முகவரியில் வசித்து வரும் இந்து, வயது சுமார் 62 த/பெ.(லேட்) பழனிச்சாமி, என்பவரின் மகளுமான க/பெ. திரு.ராமசாமி என்பவரின் மனைவியுமான திருமதி. R. ருக்மணி

... வாதிகள்

/ எதிர் /

1) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கதவிலக்கம் 12/270, வைகை நகர் தோட்டத்து சாளை, மாக்கினாம்பட்டி அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் இந்து, வயது சுமார் 45 க/பெ.(லேட்) P.கார்த்திகேயன் மனைவி திருமதி K.அகிலாண்டீஸ்வரி

2) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கதவிலக்கம் 12/270, வைகை நகர் தோட்டத்து சாளை, மாக்கினாம்பட்டி அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் இந்து, வயது சுமார் 24 த/பெ.(லேட்) P.கார்த்திகேயன் மகள் திருமதி K. பவித்ரா

... பிரதிவாதிகள்

தாவா சொத்துக்களிலிருந்து சட்டபூர்வமான முறையில் வாதிகளை புறந்தள்ளி அகற்றும் காலம்வரை விவசாயம் செய்து வருவதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாதென ஒரு உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும் மற்றும் வாதிகளின் சுவாதீனத்திலிருந்து வரும் தாவாச் சொத்துக்களை பிரதிவாதிகள் இறந்துபோன P.கார்த்திகேயன் வாரிசுகள் என்ற முறையில் ஷை 1094/1996 நெ.கிரைய பத்திரத்தை வைத்து வேறு மூன்றாம் நபர்களுக்கு வில்லங்க விவகாரங்களுக்கு வழக்கிடை காலத்தில் உட்படுத்தக்கூடாதென்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட கோரியும் தாவா செலவுத்தொகையும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 13.11.2019

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 19.03.1996, 25.05.2019, 10.09.2019, 12.09.2019, 29.09.2019, 30.09.2019 மற்றும் 01.11.2019 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி தாலூக்கா மாக்கினாம்பட்டி கிராமத்தில் ஆரம்பம்

தாவா மதிப்பு ரூ.10,000− மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.751.00/− தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 27(சி) ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

**<u>தாவா மதிப்பு விவரம்</u>**

| | | |
|---|---|---|
| தாவாச்சொத்துக்கள் குறித்து முதலாவது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கான மதிப்பு | 5,000.00 | |
| இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு 27(சி))ன்படி நீதிமன்ற கட்டணம் | | ரூ.375.50 |
| தாவாச்சொத்துக்கள் குறித்து இரண்டாவது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கான மதிப்பு | 5,000.00 | |
| இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு 27(சி) ன்படி நீதிமன்ற கட்டணம் | | ரூ. 375.50 |
| மொத்த தாவா மதிப்பு | ரூ. 10,000 | ரூ. 751. 00 |

இந்த வழக்கானது என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.CP.கருணையானந்தன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி அவர்கள் ஆஜராகியும், வாதிகள் அழைத்தும் ஆஜரின்மையினாலும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் தீர்ப்பாணை :–

1. வாதிகளின் வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

**சொத்து விபரம்**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் மாக்கினாம்பட்டி கிராமம் புலத்தில் பட்டா எண்.219 க்கு கட்டுப்பட்ட க.ச. 126/2 நெ.காலை பு.ஹெக்.1.42 க்கு பு.ஏ.3.52 தீர்வை ரூ. 4.85 பை ஷை பூமியில் ஓர் பகுதி பு.ஏ.2.10 பூமியை லேஅவுட் செய்து மகாராணி அவென்யூ என பெயரிட்டு விற்பனை செய்து வருவது போக,
மீதமுள்ள பு.ஏ.1.42 பூமியில் உள்ள ஓட்டுவில்லை வீடு போக ஷை பூமியில் விவசாயம் செய்து கொள்ளும் பாத்தியம் சுவாதீனம் சகிதம்.

ஷை சொத்துக்கள் மாக்கினாம்பட்டி ஊராட்சி எல்லைக்குட்பட்டது.

2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 26 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒப்பம்) N.பாரதிராஜன்
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

---------------------------------------

**DECREE**
O.S.No.348/2019
Additional District Munsif Court
Pollachi
Date : 26.06.2023

---------------------------------------